4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. இ. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உரிமைப் பிரச்சினை முதல்வர் அவர்கள்மீது கொடுத்து இருந்தோம். அதற்கான விளக்கத்தை...(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான பதில் அனுப்பப்பட்டுவிட்டது. திரு. டி. மணி.*

(ஆ) நெய்யாறு இடதுகரை வாய்க்காலுக்குத் தண்ணீர் வழங்கல்

திரு. டி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்மூலமாக, கடந்த 40 வருடங்களாக விளவங்கோடு தாலுகாவிற்கு, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் வந்ததை, அந்த மாநில அரசு நிறுத்திவிட்டது. எனவே, 9 வருவாய்க் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, 7 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் கருகிப்போய் உள்ளன. அந்த தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அரசு பரிசீலிக்கும்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *இது சம்பந்தமாக காவிரியிலே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. அதெல்லாம் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது.*

5. கவன ஈர்ப்பு

திருவள்ளூர் மாவட்டம், பாத்தக்குப்பம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.*